**பலாகல பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பலாகல பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று/ தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பலாகல பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 3.7 இன் பிரகாரம் நிறுவனமொன்று தயாரித்த பாதீடுகளில் பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் அந்த காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் இன்றி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்த அத்தியாயத்தின் ix இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் பாதீட்டு தகவல்கள் இன்றி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 3.7 இன் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்காக பெறுமதி | ஏற்றுக்கொள்கின்றோம். | கொங்கிறீட் உற்பத்தி சந்தை மற்றும் இலாப |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 2,134,470 தொகையான கொங்கிறீட் கல் மற்றும் கொங்கிறீட் உருளைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அப்பெறுமதி கொங்கிறீட் உற்பத்தி சந்தை மற்றும் இலாபநட்ட கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | | நட்டக் கணக்குகளின் மூலம் உரிய செலவினம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீளாய்வாண்டிற்குரிய பெறுமானத்தேய்வு பெறுமதி ரூபா 19,121,205 ஆக இருந்த போதும், DDB இன் கீழ் பெறுமானத்தேய்வு கணிப்பிடும் போது Factor பயன்படுத்தாமையின் காரணமாக விரிவான வருமானக்கூற்றில் அது ரூபா 24,895,741 ஆக ரூபா 5,774,536 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | சரியான பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 156,914 ஆக இருக்க வேண்டிய போதிலும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் அது ரூபா 913,190 ஆக ரூபா 756,276 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | பெறவேண்டிய வட்டி வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 கணக்கு விடயங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான பெறுமதிக்கும் பட்டோலைகளில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கும் இடையே ரூபா 1,349,776 வேறுபாடும், காசுப்பாய்ச்சல் கூற்றில் நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்தல் மற்றும் பேரேட்டுக் கணக்குகளுக்கிடையே ரூபா 180,021 வேறுபாடும் காணக்கூடியதாக இருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | வேறுபாட்டிற்கான காரணத்தை கண்டறிந்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 6,091,377 கூட்டுத்தொகையான 03 கணக்கு விடயங்களுக்குரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | ஏற்றக்கொள்கின்றோம். | இருப்பு பதிவேடு மற்றும் இருப்பு மெய்மையாய்வு அறிக்கை பேணிச் செல்லப்படல் வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

**சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 177 ஆம் பிரிவு | சபையில் சேவையாற்றுகின்ற தற்காலிக, அமைய ஊழியர்களின் சேவை முடிவுறுத்தப்படுவதற்கு முன்னர் அவர்களுக்கு பணிக்கொடைக் கொடுப்பனவுகளுக்காக உத்தேச முறைமையொன்று தாபிக்கப்பட்டு உரிய ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அரசாங்க சேவைகள் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு பணம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 177 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2006 நவம்பர் 14 ஆந் திகதிய இலக்கம் PL/07/01/53 என்ற உள்ளூராட்சி மறுசீரமைப்புச் சுற்றறிக்கை | | | |
| (i) | இலக்கம் 09 | மயான நிலங்களின் ஆவணங்களை பராமரித்தல், வெளியிடுதல் மற்றும் மதில் வேலிகளை இட்டு பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பாதுகாப்பு வேலிகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2006 நவம்பர் 14 ஆந் திகதிய PL/07/01/53 என்ற உள்ளூராட்சி மறுசீரமைப்புச் சுற்றறிக்கை இலக்கம் 09 இன் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | இலக்கம் 06 இன் 2.2(iii) | சபைக்குரிய வீதிகளை வர்த்தமானியில் பிரசுரிக்காதிருந்ததுடன் எடுக்கக் கூடிய ஆகக்கூடிய நிறை காட்சிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | உள்ளுராட்சி மறுசீரமைப்புச் சுற்றறிக்கை இலக்கம் 06 இன் 2.2(iii) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா ரூபா 10,159,871 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 12,486,226 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வாடகை | | |
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடை வாடகை ரூபா 245,509 தொகையும், இறைச்சிக் கடை கேள்வி வருமானம் ரூபா 1,420,800 தொகையையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் கேள்வி பணத்தை அறவிடுவதற்கு வழக்கு தொடரப்பட்டுள்ளது. | சகல நிலுவை பணத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஏனைய வருமானம் | | |
| | மீளாய்வாண்டிற்குரிய இயந்திரங்களை வாடகைக்கு வழங்கியதற்காக ரூபா 1,592,100 தொகையையும், 2020 ஆம் ஆண்டின் போது இயந்திரத்தை வாடகைக்கு வழங்கியதற்காக ரூபா 248,200 தொகையையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் கெப் வண்டியொன்று விபத்திற்கு உட்பட்டிருந்ததுடன் அதற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 112,477 செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்த விபத்திற்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீண்டும் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டமொன்றின் கீழ் சலுவை விலையில் மக்களுக்கு ரூபா 5,165,864 தொகையான பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட போதும் அந்த பொருட்களை பகிர்ந்தளிப்பதன் மூலம் அறவிட வேண்டியிருந்த ரூபா 974,127 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சகல நிலுவை பணத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 09 சந்தர்ப்பங்களின் போது மோட்டார் கிறேடரை வாடகைக்கு பெற்ற காலத்தினை விட அதிகளவான காலம் வேலை செய்தமையால் கிடைக்க வேண்டிய ரூபா 368,000 வாடகைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய சகல பணத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் 05 சந்தர்ப்பங்களின் போது விண்ணப்ப பத்திரம் மற்றும் எந்தவொரு எழுத்துமூல அங்கீகாரமின்றி வாடகை அடிப்படையில் வாகனங்கள் வழங்கியமையால் சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 270,000 வாடகை வருமானம் என்பன கிடைத்திருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய சகல பணத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் வாடகை அடிப்படையில் கூடிய இயந்திர மணித்தியாலம் 416.2 இற்காக கிடைக்க வேண்டிய ரூபா 587,800 தொகையான வாடகை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய சகல பணத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 4,500,000 ஆன 03 வாகனங்களின் உரித்தை சபைக்கு கையேற்பதற்கு 2021 ஆம் ஆண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்ற இலக்கம் இன்றிய கெப் வண்டி மற்றும் அரிசி மா தயாரிக்கும் இயந்திரம் என்பன பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ தேவையான நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டின் போதும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்படும். | மீண்டும் பயன்படுத்து வதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 சுற்றாடல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையினால் கழிவுப்பொருட்கள் சேகரிக்கப்படாதிருந்தமையால் அதிகாரப் பிரதேசத்தில் உருவாகின்ற துண்டு கழிவுப் பொருட்கள் முறையற்ற வகையில் சுற்றாடலில் அகற்றப்படுகின்றது. | கழிவுப்பொருட்களை பெறுதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் உரிய நபர்களின் மூலம் கழிவுப் பொருள் மீள்சுழற்சி செய்வதற்கான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | முறையாக கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்பாடுகளை அமுல்படுத்துதல் வேண்டும். |